மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் பணிகள் குறித்து ஆய்வு செய்கிறபோது, அந்தப் பிரச்சினை எங்களுடைய கவனத்திற்கு வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு அதுகுறித்து எடுத்துச் சொல்லியிருக்கிறோம். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்குமானால், அதையும்* clear *செய்து, விரைவாக அந்தப் பணிகள் நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேநேரத்தில், இம்மாத இறுதிக்குள் நானும் அந்த இடத்தை ஆய்வு செய்யவிருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

துணை மின் நிலையம்

***1701—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கொட்டையூர் பகுதியில் 33/11 K.V. *துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கும்பகோணம் தொகுதி, மேலகாவேரி, கொட்டையூர், பாபுராஜபுரம் மற்றும் வலையப்பேட்டை ஆகிய பகுதிகளில் அதிகரித்துவரும் மின் தேவையைக் கருத்தில்கொண்டு, கொட்டையூரிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மேலகாவேரியில் 33/11 K.V. *துணை மின் நிலையம் அமைக்க*

2023 ஜனவரி 13]

கும்பகோணம் கவின் கல்லூரிக்குப் பின்புறம் 1 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலம் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கான நுழைவு உரிமை பெறப்பட்டு, கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டில் 1 இலட்சம் விவசாயிகளுக்கும், இந்த ஆண்டில் 50,000 விவசாயிகளுக்கும் இலவச மின்சார இணைப்புகளை வழங்கிய, விவசாயிகளுடைய தோழனாக விளங்குகிற மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கும்பகோணம் மாநகராட்சியாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. கொட்டையூர் பகுதியில் புறவழிச் சாலை செல்வதால், அந்தப் பகுதியில் வீடுகள் அதிகம்; தொழிற்சாலைகள் அதிகம்; விவசாய நிலங்கள் அதிகமாக இருக்கிற அந்த இடத்தில் மின் தேவையைக் கருத்தில்கொண்டு, அந்தப் பகுதி மக்களுக்குத் தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டுமென்று 14-7-2014 அன்று இம்மாமன்றத்தில் கேட்டிருக்கிறேன். அதற்குப் பிறகு, 2016 ஆம் ஆண்டிலும் கேட்டிருக்கிறேன். மாண்பிற்கினிய அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் கும்பகோணம் மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வளர்ந்து வருகிற கொட்டையூர் பகுதியில் விரைவாக அப்பணியை செய்து கொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகரித்து வருகின்ற மின் தேவையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளில் 316 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான ஆணைகளை வழங்கியிருக்கின்றார்கள். அதனடிப்படையில்,*

தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 10 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. அதில் கும்பகோணம் தொகுதியில் 3 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்தப் பகுதியில் பணிகள் தொடங்கப்பட்டு, விரைவாக முடிப்பதற்கு துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதி, திருப்புறம்பியம்–திருவாய்ப்பாடி இடையில் கல்லூர் பகுதியில் கோவிலாச்சேரி, சோழபுரம் பகுதிகளில் குறைந்த மின்னழுத்தம் இருக்கிற காரணத்தினால், அந்தப் பகுதியில் 33/11* K.V. *துணை மின் நிலையம் அமைப்பதற்காக கடந்த அரசிடமும் கேட்டிருக்கிறேன்; இப்பொழுதும் கேட்டிருக்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *இன்றைக்கு மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் தோழனாக இருக்கின்ற இந்த நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவதாகக் கூறியிருக்கிறார்கள். அந்த இடங்களில் மேய்க்கால் புறம்போக்கும், நீர்நிலைப் புறம்போக்கும் இருப்பதாக அறிவிக்கிறார்கள். மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்று, தற்போது கால்நடைகள் அதிகம் இல்லாத காரணத்தினால், அந்த மேய்க்கால் புறம்போக்கை வகைமாற்றம் செய்து அவ்விடத்தில் துணை மின் நிலையம் அமைத்துத் தருவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

2023 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 316 துணை மின் நிலையங்களில், 274 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக அரசு நிலங்கள் கண்டறியப்பட்டு, வகை மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய 42 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் தேர்வு செய்யக்கூடிய பணியில் துறை ஈடுபட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்த நிலத்தையும் துறைரீதியாக மாவட்ட ஆட்சியரிடம் கலந்துபேசி, அதைத் தருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட நாகவேடு மற்றும் அதைச் சுற்றியுள்ள நெசவாளர்கள் மற்றும் விவசாய மக்களின் நலன் கருதி, கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 33/11* K.V. *துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலமும் வாங்கி கொடுக்கப்பட்டுவிட்டது; நிதியும் கொடுக்கப்பட்டுவிட்டது. இரண்டு வருடங்கள் ஆகியும் இதுவரை, துணை மின் நிலையம் அமைக்கும் பணி துவங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 8 இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, இடங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற பகுதியும் அந்த 8*

இடங்களில், இடம்பெற்றிருக்கிறது. எனவே, அந்த இடங்களை விரைவாகப் பெறுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. மொத்தம் 42 இடங்கள்தான் கண்டறியப்பட வேண்டும். மீதி 274 துணை மின் நிலையங்களுக்கு இடங்கள் கண்டறியப்பட்டு விட்டன. துணை மின் நிலையங்கள் அமைக்க கண்டறியப்பட்டுள்ள அந்த இடங்களுக்கு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, அனுமதி பெறப்பட்ட பிறகு tender முடிந்தவுடன் பணிகளைத் துவக்குவதற்கு அரசு தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்து மின் பகிர்மான வட்டங்களும் ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்ட ஈரோடு மண்டலத்தில் இருக்கின்றன. ஈரோடும் பெரிய மாவட்டம், சேலமும் பெரிய மாவட்டம். சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனி மண்டலம் தேவையாக இருக்கின்ற காரணத்தால், அவ்வாறு அமைக்கப்படுமா? சேலம் மண்டலத்தின்கீழ் ஆத்தூரில் மின் பகிர்மான வட்டம் ஒன்று தேவையாக இருக்கிறது. எனவே, இவ்விரண்டையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவதற்கு முயற்சி செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்தில் மொத்தம் 9 மண்டலங்கள் செயல்பட்டுவந்த நிலையில், தமிழகத்தின் ஒப்பற்ற முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 1½ ஆண்டுகளில், 3 புதிய மண்டலங்களை தங்களுடைய திருக்கரங்களால் துவக்கி வைத்திருக்கின்றார்கள். சேலத்தைப் பொறுத்தவரையில், அதிகமான மின் இணைப்புகள் இருக்கின்றன. எனவே, சேலத்தில் புதிய மண்டலம் அமைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, வரக்கூடிய ஆண்டுகளில் துறை அதற்கு முன்னுரிமை அளிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஜனவரி 13]

அதேபோன்று மேட்டூரில் ஏற்கெனவே ஒரு வட்ட அலுவலகம் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதற்கடுத்து ஆத்தூரில் துவக்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. எனவே, வரக்கூடிய நாட்களில், தேவை ஏற்படின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

27—

மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டை

***50605—திரு. S. சதாசிவம்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளையும் சேர்த்து, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டையை அங்கீகரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கிய திட்டத்தையும் ஒருங்கிணைத்து, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 819 அரசு மருத்துவமனைகள் மற்றும் 956 தனியார் மருத்துவமனைகள் என்று 1,775 மருத்துவமனைகளில் இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், மக்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டையைப் பயன்படுத்தி, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1,39,87,495 பயனாளி குடும்பங்கள் இலவசமாக சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும் தேவைக்கேற்ப, கூடுதல் மருத்துவமனைகள்